# காலத்தின் குரல்கள்

எம்.ஸி.எம்.ஸுபைர்

தமிழ் மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டு விழா !

இலங்கைப் பாராளுமன்றத்தின் சபாநாயகர் மாண்புமிகு அல்ஹாஜ் எம். ஏ. பாக்கீர் மாக்கார் அவர்கள் தலைமையில், 1981ம் ஆண்டு, நவம்பர் மீ 11ம் திகதி கொழும்பு ஸாஹிராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற கவிஞர் ஸுபைருக்கான பாராட்டு விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட நூல் ''காலத்தின் குரல்கள்''

# பாராட்டுக் குழு

காப்பாளர்: மாண்புமிகு அல்ஹாஜ் எம். ஏ. பாக்கீர் மாக்கார் அவர்கள்

உபகாப்பாளர்: இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தமிழ்ச் சேவை இயக்குனர் கலாநிதி கே. எஸ். நடராஜா.

தலைவர்: ஆலிஜனாப் எஸ். எம். ஷஹாப்தீன் ஜே.பி.

உப தலைவர்கள்: அல்ஹாஜ் எஸ். எம். ஏ. ஹஸன் ஜனாப் எஸ்.எச். எம். யாஸீன்,

இணைச் செயலாளர்கள்: அல்ஹாஜ் எஸ். எம். ஹனிபா அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர், ஜே. பி.

பொருளாளர்: ஜனாப் எஸ். ஏ. எம். எம். அஷ்ரப்

உறுப்பினர்கள்: அல்ஹாஜ் மௌலவி எச். சலாஹுதீன், திரு கே. பி. சிவம், ஜனாப் எஸ். ஏ. ஆர். எம். ஸெய்யத் ஹசன் மவ்லானா, மௌலவி எம். எச். எம். புஹாரி (பலாஹி), அல்ஹாஜ் எஸ். எம். தாஜுதீன், ஜனாப்கள்; ஏ. எம். எம். புவாஜி, எம். எம். மக்கீன், கலைவாதி கலீல் எஸ். முத்துமீரான், ஏ. எஸ். ஏ. ஜப்பார், கே. எம். எஸ். ஹுஸைன், எம். எம். பைரோஸ், பி. எம். இஸ்மத் இன்னோர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தின் குரல்கள்

கவிஞர் எம். ஸி. எம். ஸுபைர்

தனிப்பாடல்கள்

தொகுப்பு

கொழும்பு

செட்டியார் தெரு மீலாத் குழு

தந்த

பூரண ஒத்துழைப்பினால்

இந்நூல் உருவானது !

## தமிழ் மன்றம்
## கல்ஹின்னை, கண்டி

[illegible] நண்பர் S. [illegible] அவர்களுக்கு மிக்க அன்புடன்

[illegible]

11. 11. 81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KALATHIN KURALKAL

COLLECTION OF POEMS

*BY*

M. C. M, ZUBAIR

(First Cl. Trd. Teacher)

AUTHOR OF

- MALARNTHA VAALVU
  (*an Epic Poem*)
- MALARUM MANAM
  (Collection of Poems for Children)
- KANNANA MACHCHI
  (articles on Folk Poems)

*All Rights Reserved*

First Published in November 1981
*Ninth Publication of*

✱ TAMIL MANRAM
GALHINNA — KANDY

PRIZE Rs. 6-00

*PRINTERS*:
ARIYA PRINTERS
KANDY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டாளைச் சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
தமிழ் விரிவுரையாளர்

## அ. ஸ. அப்துஸ் ஸமது B. A. Hons.

அவர்கள் உவந்தளித்த

# அணிந்துரை.

முப்பது வருடங்களுக்கு மேலாகக் கவிதைக் கன்னியைக் கடிமணஞ் செய்து கலை இலக்கிய வாழ்வு நடாத்தி வருபவர் எனதரும் நண்பர் எம். ஸி. எம். ஸுபைர். குறிஞ்சி நாட்டின் குயிலாகத் தனிக் குரல் எடுத்துக் கூவி வருபவர் அவர். அவரது தனிப்பாடற் றொகுதியைக் கண்டு களிக்க உள்ளம் அவாவி நின்றவர்களில் நானும் ஒருவன். ஒரு கவிஞனுடைய நோக்குகளையும், சிந்தனைப் போக்குகளையும் முழுவடிவத்தில் காண்பதற்கு அவரது கவிதைகளை ஒன்றுபடுத்தி ஒரு தொகுதியாகக் காண்பதே சிறந்ததாகும்.

இந்தியப் பத்திரிகைகளில் பெரிதும் அறிமுகமானவர் ஸுபைர். ஈழத்துப்பத்திரிகைகளிலும் மலர்களிலும் அவ்வப்போது எழுதிய கவிதைகள் தேனின் இனிமை, மானின் மருட்சி, மலரின் மென்மை, நிலாவின் தெளிவு ஆகியன ஒன்றுபட்ட அழகோவியமாகும். அதனைப் படித்தின்புறும் பாக்கியம் இன்று நமக்குக் கிடைத்துள்ளது. இவரது கவிதை வெறும் கற்பனைக் கோலமல்ல. சமுதாய வீறும், நாட்டுப்பற்றும், இன எழுச்சியும் மிகுந்து அருமறை வழியிலும் பெருமறைவாழ்விலும் தோய்ந்து தனிச்சுவை பெற்று விளங்குவன.

சொல்லடி சிவசக்தி
என்னைச் சுடர்மிகு அறிவுடன் படைத்து விட்டாய்
வல்லமை தாராயோ — இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே.

என்று பாரதிபாடியது போலத்தம் ஆற்றலும், அறிவும் உணர்வும் மனிதகுலம் வாழப் பயன்பட வேண்டும் என்பது இவரது ஆசங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகும். ஆதலால் சமுதாயத்தை மறவாத கவிஞராகவே இவர் வாழ்ந்து தமிழ் செய்து வருபவர். வீர முஸ்லிம் இளைஞர்களை நோக்கி இவர் கேட்கிறார்.

கண்மூடி அந்நியர்தம்
கால் தொடரல் புதுமையா?
கண்ட கண்ட கொள்கைக்கெல்லாம்
கை கொடுத்தல் பெருமையா?

இக்கேள்வியின் மூலம் இஸ்லாத்தின் தனித்துவத்தைப் பின்பற்றும்படி வீர முஸ்லிம்களை வேண்டி நிற்கிறார். இவ்விதமான அந்நிய மோகம் ஆண்களுக்கு மட்டுமின்றிப் பெண்களிடமும் உண்டு. அது அவர்கள் கற்ற கல்வியையே திசை திருப்பி விடுகிறது. பெற்றவள் பண்பை விற்றுப் பிறர் பண்புக்குப் பலியாகிவிட்ட பரிதாபத்தைச் சாடுகிறார் கவிஞர்.

கற்ற அன்னைக் குலமே — உந்தன்
கல்வி எங்கள் கலாசாரத்தை
உற்றமறையின் வழியை — நாதர்
உவந்த நெறியை ஒதுக்க வென்றால்
சற்றும் உன்னாற் பயனுண்டாமோ!
சமூக வளர்ச்சி அதனாலாமோ!

என்று வினவுகின்றார். தன் நிலை மறந்து நிற்கும் பெண்குலம் என்ன பதில் சொல்லும்! கவிஞர் இவ்வாறு கற்ற பெண்களைச் சாடியபோதும், பெண்குலத்தின் நியாயத்துக்காக மற்றோரிடத்தில் போராடுகிறார், அதற்காக ஆண்குலத்தைக் கண்டிக்கிறார். பலாச்சுளையைத் தேனில் தோய்த்துத் தருவது போல நபிமொழி ஒன்றைத் தம் கவிதைத் தேனில் குழைத்துத் தருகிறார்.

செல்வம் எழில் குணம் மூன்றிலுமே — உயர்
செல்வமாம் நற்குணம் ஒன்றினையே
இல்லாளுக்கேற்றமாய்க் கொண்டிடுக — எனும்
ஏந்தல் நபி மொழி ஏன் மறந்தார்.

பெருமானார் மீது கவிஞருக்குள்ள ஈடுபாடு, இவருடைய பாக்கள் முழுவதிலும் பரக்கக் காணலாம். இஸ்லாத்தின் இலட்சிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வின் பால் உளம் ஈர்க்கப் பெற்ற கவிஞரின் பாடல்கள் நம் சமுதாயத்தின் முதிசமாகும். பெருமாளுரின் கொள்கை, வாழ்வு, நெறிமுறைகள் என்பனவற்றை நாம் பின்பற்றுவது மட்டும் போதாது. அவரது தளரா உறுதி, தன்னம்பிக்கை கொள்கை வேட்கை, இறை நம்பிக்கை இவற்றையும் பின்பற்ற வேண்டும் என்று நம் இளைஞர்களை அழைக்கிறார்.

உறவினரும் பகைவர்களும் ஒன்றுசேர்ந்து
உயிர் குடிக்க வந்தாலும் ஒருவனல்லாஹ்
உணர்ந்திடுவீர் எனவாழ்ந்த உத்தமர்நம்
பெருமைநபி மணிதந்த கொள்கைவாழ்வு !

ஆம் ! அத்தகைய கொள்கை வாழ்வு இன்று நம்மிடையே பரிணமிக்க வேண்டும்,

எங்கள் ஈழத்திருநாடு அதுபெற்ற பெறற்கரிய சுதந்திரம் என் பனவற்றையும் தம் இனிய பாக்களில் அழகொளிரும் மணிகளாக இழைத்துச் செல்கிறார் ஸாபைர். அவை எங்கள் நாட்டின் மீது இனிய உணர்வுகளையும் பற்றையும் எழுப்புகின்றன.

எங்கள் நாடு இன்பவீடு
என்றே உணர்ந்திடுவோம் — இந்த
இன்ப வீட்டில் வாழும் சோதரர்
இனியர் நாமறி வோம்

'இந்த இன்பவீட்டில் வாழும் சோதரர் இனியர்' என்ற அடி எங்களது இனிய ஒருமைப்பாட்டை அழகாக விளக்குகிறது, பாரதி யார் பாரதத்தாய் பற்றிக் கூறுகையில்

முப்பதுகோடி முகமுடையாள் — உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள் — இவள்
செப்பு மொழி பதினெட் டுடையாள் — எனில்
சிந்தை ஒன்றுடையாள்.

என்கிறார். அங்கோ செப்பும் மொழி பதினெட்டு உண்டு. இங்கோ இனிய மொழி இரண்டே உண்டு. அதைப் பேசும் மூன்று சாகியத்தாரும் இனியவரே. அவர் வாழும் நாடும் இனிய வீடே' என்று கவிஞர் பாடும் அழகு இன்புறத்தக்கது. இந்த ஈழமணித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாட்டின் சுதந்திரத்துக்காக நம் தலைவர்கள் பட்ட இன்னல்களை மற்றோர் அழகிய பாடலில் எடுத்துக் காட்டுகிறார் கவிஞர்.

அன்னியன் அன்னையை அடிமை கொண்டானெனும்
துன்பம் உள்ளே துளைத்திடல் கண்டு
இன்னுயிர் நீத்தும் இன்புடனின்ற
தாயவள் துயரைத் தளையுடன் நீக்கத்
துணிந்தனர் முற்றும் துறந்தனர் சுகமே

இத்தனை துயரையும் ஏற்றுப் பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்து எல்லோரும் இன்புற்று வாழும் வகை செய்தல் வேண்டும் என்று கவிஞர் கூறுகையில் நம் உள்ளமும் புல்ரிக்கிறது.

இத்தகைய அருமையான கவிதைகளையெல்லாம் நமக்கு வாரி வழங்கிய குறிஞ்சிக் குயில் ஸாபைர் நம் அன்புக்கும் ஆதரவுக்கும் உரியவர். தம் கவிதா வாழ்வில் எண்ணற்ற படைப்புகளைத் தந்து ஏற்றம் கண்ட அவரை நாம் என்றுமே நினைவு கூரும் வண்ணம் கௌரவிப்போம்; இவர் நாமம் வாழ்க! அவர் கவிதை நின்றொளிர்க!

அ. ஸ. அப்துஸ் ஸமது

அக்கரைப்பற்று,
12-01-1981.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை !

இலங்கைத் திருநாட்டின் பாரம்பரியப் புகழ்பூத்த சமூகங்களுள் முஸ்லிம் சமூகமும் ஒன்று. அதனால் முஸ்லிம் சமூகமும் இந்நாட்டின் அரசியல், சுதந்திரம், பொருளாதாரம் கல்வி கலாசாரம் ஆகியவற்றின் வளத்துக்காகத் தியாகம் பல புரிந்து, தளராது, உழைத்து வருகிறது.

இந்த நிலையில் இந்நாட்டு மக்கள் அனுபவிக்கும் பொதுவான உரிமைகள் அனைத்தும் முஸ்லிம் சமூகத்துக்கும் உரித்தாகும்! இந்த உரிமைகளுக்கு எந்த உருவில் இடர்கள் வந்தாலும், விழிப்பாக இருந்து, காத்துக்கொள்ள வேண்டியது முஸ்லிம் சமூகத்தின் கடமையாகும்.

இத்தகைய சூழ்நிலைகள் உருவாகும் போது, அதனை உணர்த்திக் காக்கும் நடவடிக்கையில், எனது பங்களிப்பாக எழுந்த உணர்வுக் குரல்களின் வடிவங்களிற் சிலவே இந்தக் 'காலத்தின் குரல்கள்'

இந்தக் குரல்கள், இன்று, ஏதோ ஒரு வகையில் குறிப்பாக நமது சமூகத்தின் சிந்தனையில் மோதிப் பயன் விளைகின்றன என்பதை அவதானிப்பவர் அறியலாம். அல்ஹம்துலில்லாஹ்!

எனது சமூகத்தைப் போலவே ஏனைய சகோதர சமூகப் பிரச்சினைகளையும், நான் மனிதாபிமானத்தோடு நோக்குகிறேன்! அவை தேசிய நோக்காக இங்கு பிரதிபலிக்கின்றன.

எனது கடமை என உணர்ந்து செய்த சிறு முயற்சிகளைப் பெருமனதோடு, பணியென மதித்துப் பாராட்டும் நல்லுள்ளங்கள், அனைத்துக்கும், குறிப்பாகக் கவிஞர் ஸுபைர் பாராட்டுக் குழுவுக்கும் என் இதயங்கனிந்த நன்றி உரித்தாகும்.

இந்த நூல் உருவாகப் பூரண ஒத்துழைப்புத் தந்துதவிய கொழும்பு செட்டியார் தெரு மீலாத் குழுவினருக்கு எனது உளம் பூரிக்கும் நன்றிப் பெருக்கை உரித்தாக்குகிறேன்.

காலத்தின் குரல்களுக்குக் கனிவான அணிந்துரை தந்த நண்பர்கள் அ. ஸ. அப்துஸ்ஸமது எம், எல். எம். ஸித்தீக் ஆகியவர்களுக்கும், நூல் வெளிவர ஒத்துழைத்த நண்பர் க. ப சிவம், ஓவியர் 'ஹமீனு' அழகுற அச்சிட்டு தந்த கண்டி ஆரியா அச்சகத்தினர் யாவருக்கும் நன்றிகள் பல,

அன்பன்,

எம். ஸி. எம். ஸுபைர்

8-11-1981.

கல்ஹின்னை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

தமிழகத் துக்கும் தாயகம் இலங்கை
அமிழ்தகத் துக்கும் அருள்மறை இலக்கியப்
பாலமாய்ப் பணிசெயும் பைந்தமிழ்ச் செல்வர்
அறிஞர் சித்தி லெப்பையின் நாவலாம்
"அசன்பே சரித்திரம்" மறுப்பதிப் பீந்தவர்,
கழக மமைத்தும் கருத்துரை வழங்கியும்
பழகிடும் அன்பர்கள் பயன்பெற உதவியும்
அழகிய பணிபல அடக்கமாய்ப் புரிந்திடும்
அரும்பண் பாளர் அறிவின் தோழர் :
சமூக மூயிர்ப்பச் சலியா துழைக்கும்
சான்றோர்; சன்மார்க் கத்தின் சேவகர்;
அமைந்தநற் பொதுப்பணிக் கணிதரும் தூயவர்,
அருஞ்சமா தானநீ தவானாய்த் திகழ்பவர்;
நாட்டின் திசையெலாம் நல்லவர் நட்பினைப்
போற்றி வளர்த்துப் பொலிவுறும் பண்பினர் ;
அருள்நிழல் எனக்கென அல்லாஹ் தந்தவர்
எஸ்.எம். ஷஹாப்தீன் நானா அவர்க்கு
ஞாலத் துயர்ந்த வாழ்வினை விழைந்து
'காலத் தின்குரல்' இதனைச்
சமர்ப்பணம் செய்கிறேன் இறையவர்க் கருள்கவே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை!

இறைவா எந்தன் இதயத்தில்
இனிதே யரும்பும் ஆசையெலாம்
குறைதீர் உந்தன் துணைவேண்டும்
குரலாய்க் குழையும் ஒலிகேளாய்!

வையத் தெந்தன் வாழ்க்கையினை
வண்ண விளக்காய் ஆக்கிவிடு!
ஐயமின்றி யதன்மூலம்
அகிலத் திருளை நீக்கிவிடு!

மலர்கள் பொழிலுக் கெழிலூட்டும்
மாண்பு போலென் னுயிர் மூலம்
அலரும் அன்னை நாட்டுக்கு
அயரா உயர் வுண்டாக்கி விடு!

விரும்பும் எந்தன் வாழ்க்கையோர்
விட்டில் போல ஆகட்டும்!
திரும்பும் திசை யெல்லாம் அறிவாய்
தீபந் தனைநே சிக்கட்டும்!

எந்தன் பணி யெல்லாம் ஏழை
எளியோர் வாழ்வுக் காகட்டும்!
நொந்து வாடும் யாவர்க்கும்
நோவை நீக்க உதவட்டும்!

எல்லாத் தீமை தமை விட்டும்
என்னைக் காப்பாயினி யோனே!
நல்லோர் பாதை தனிலென்னை
நடத்தி யருள்வாய் றஹ்மானே!

(கவிஞர் இக்பால் கவிதைத் தழுவல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீர முஸ்லிம் இளைஞரே!

விந்தை செய்யும் வலிமை மிக்க
வீர முஸ்லிம் இளைஞரே !
சிந்தை செல்லும் போக்கிற் சென்று
சீர்மையென்ன காணுவீர் !

கண்ணை மூடி யந்நியர் தம்
கால் தொடரல் புதுமையா !
கண்ட கண்ட கொள்கைக் கெல்லாம்
கை கொடுத்தல் பெருமையா !

இறைவழியாம் திருக்குர்ஆனும்
இனியர் நபிகள் வாழ்க்கையும்
கறையழிக்கும் பாதை காட்டும்
காதல் கொண்டு செல்லுவீர் !

பொருளியலும், புவியியலும்
புவியை ஆளும் இயல்களும்
அருளியலும், அறிவியலும்
அனைத்தும் அங்கு காணுவீர் !

ஆய்ந்து கொண்ட கொள்கையெந்தன்
ஆவியாகும் ! அதை விடக்
காய் கதிரும் தண்மதியும்
கைதரினும் கைவிடேன் !

என்று கொண்ட கொள்கையுறுதி
ஏற்ற நபியின் 'உம்மத்' தோர்
இன்றெடுப்பார் கைப்பிள்ளையாய்
இருப்ப தென்ன ஏற்றமோ !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர் கொடுத்து உரிமை காத்த
உயர் குடியின் இளைஞரே !
துயர் துடைக்கச் சமூக மூங்கள்
துணையை நாடல் உணருவீர் !

அலரும் உள்ளத் தூய்மை பொங்க
அன்பு அணியில் திரளுவீர் !
வளரும் பிளவை முளையிற் கிள்ளி
வலிமை பெற்றுத் திகழுவீர் !

ஒருடலின் உறுப்புகளாய்
உள்ளவர் முஸ்லிம் எனிற்
பாரிடத்திற் பிரிவு கண்டு
மகிழ்தற் கலர்க்கு இயலுமோ !

ஒன்று பட்டு உறுதி கொண்ட
உண்மை முஸ்லிம் இளைஞரே !
நன்றுணர்ந்து நம் பெருமை
நாட்ட நாட்டம் கொள்ளுவீர் !

—ஹமீத் அல் - ஹுஸைனி ம. வி. மீலாத் மலர்-1970.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவா பெருமை!

வான்முட்டும் மாளிகை வாழ்வார்—அண்டை
வயிறொட்டி வற்றல் குடிசையில் நொந்து
ஊன் வற்றி வாழ்வோரைக் கண்டும்—உளம்
சற்றும் இரங்கார்! உவந்துண்டு வாழ்வார்.

ஓரங்கம் நொந்து வருந்தில் - உடல்
ஒவ்வோரணுவும் வருந்துதல் போலப்
பாரெங்கும் முஸ்லிம்கள் வாழ்க - எனும்
பெருமானுரை மறந்தே மதிகெட்டார்!

ஒற்றுமை வாழ்வை யுணரார் — ஒன்றி
வாழ்வைக் கெடுக்கும் வகையில் முயல்வார்
கற்றும் உளப் பண்பு கொள்ளார் — பெரும்
புல்லர்கள் போலக் கயமைகள் செய்வார்

பல்கலை ஆய்ந்து பயில்வார் — அதன்
பண்பதனால் உயர்வெய்திய பின்னர்
கல்வியைத் தந்தான் இறைவன் — எனிற்
காட்டுக! என்று குதர்க்கம் புரிவார்!

உரமுற்ற தேகம் உடையார் — உடல்
நொந்து உழைத்துண்டு வாழ விரும்பார்
இரந்துண்டு வாழ்தல் இனிதாம் - என
எங்கும் அலைவார்! பெருமையும் கொள்வர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் இருப்பதைக் கொண்டு – உழைத்
தின்னும் பெருக்க நினைத்து முயலார்
பைய ஒருவனை அண்டி – கவ
ரெண்ணங் கொண்டே கையிலுள்ள
திழப்பார் !

ஏழைகட் கியார் இருக்கும் - பணம்
தன்னைப் பெருக்கிட வஞ்சம் புரிவார் !
கோழைகள் ! செல்வப் பயன்தான் - ஈதல்
என்பதை ஏனோ உணர்ந்திட மாட்டார் !

வஞ்சம் பொறாமை நிறைந்து –வளம்
குன்றும் உள்ளத்துடன் வாழ்தல்
விஞ்சும் பெருமையோ சொல்வீர் ! – வெறும்
வீணர்களாக அலைந்திடலாமோ !

அருள்ஜோதி – ஒக் நவ இதழ் – 1956.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சினில் உறுதி வேண்டும் !

அகமதிற் றூய்மை வேண்டும்
ஆழ்ந்த நல் லறிவு வேண்டும்
பகையொழிந் தன்புத் தென்றல்
பாரெலாந் தவழ்தல் வேண்டும்
அகன்புவி அமைதி யோங்க
ஐக்கியம் நிலவவேண்டும்
அகந்தையை யொழித்து யாரும்
அருந் தொழில் முயல வேண்டும் !

சாதியும் இனமும் பேசிச்
சனங்களைத் தூண்டிப் பின்னர்
நீதியும் நேர்மை சாந்தம்
நெறியெலாம் நெகிழச் செய்து
மூதறி வாளர் போலும்
முனைந்து வீண் பொய்கள் சாற்றிச்
சாதியாற் சண்டை மூட்டும்
சழக்கர்கள் மாழ வேண்டும் !

அறிஞரைப் போற்ற வேண்டும்
அருங்கலை வளர்க்கவேண்டும்
வறியவர் மகிழ ஈயும்
வள்ளலார் வாழ வேண்டும்
நெறிவழி யகத்தைப் போக்க
நெஞ்சினில் உறுதி வேண்டும்
திறமையும் திருவும் மிக்க
தீரர்கள் தோன்ற வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகமர் மாதர் கல்வி
அறநெறிச் செல்லல் வேண்டும்
வளமுறு வாழ்வு காட்டும்
வர்த்தமா னங்கள் வேண்டும்
உளமகிழ்ந் தெவரும் வாழ
உணவொடு நிதியும் வேண்டும்
விழலரை வீழ்த்தும் வீரம்
விரிந்த நன் மனத்து வேண்டும் !

முஸ்லிம் - உதயம் 15-5-53.

# அழகு

ஆண்களுக் கழகு நாணம் — அது
அதியழகாம் பெண்களுக்கு !

மக்களுக் கழகு நீதி - அது
பேரழகாம் தலைவருக்கு !

பாவத்தில் மீளுதல் அழகு - வளர்
வயதினில் முதிர்ந்தவர்களுக்கு !

வாலிபர்க் கது மிக அழகு - இரு
உலகிலும் வாழ்வுயர்வதற்கு !

செல்வர்க்குத்தான் கொடை அழகு - அது
வறியவர்க்கோ மிக அழகு !

நபிமணி கருத்துயர் விருந்து — இவை
நானிலத் தவர்க் கருமருந்து !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புப் பிணைப்பு

புத்துணர்வூட்டும் புதுப்பிறையே - புதுப்
புன்னகையள் குணக்குன்றனையள்
ஒத்த உளத்தினள் ஏழையென்னில் - மணம்
ஒப்பத் தகாதவள் என்பதுவோ ?

செல்வம், எழில், குணம் மூன்றிலுமே - உயர்
செல்வமாம் நற்குணம் ஒன்றினையே
இல்லாளுக் கேற்றமாய்க் கொண்டிடுக - எனும்
ஏந்தல் நபிமொழி ஏன் மறந்தார் ?

அன்பாளர்க் காசி அருள் பிறையே - 'மஹர்'
ஈந்து பெண் கொள்க எனும் மறையில்
பண்பாளர் இன்றிலையோ ? பணம் - ஒன்றையே
கண்வைத்துப் பெண்ணை மதித்திடலேன் ?

அண்ணல் நபியவர் அன்பு மகள் - மஹர்
தன்னையே பேசி மணமுடித்தார்
அன்னார் வழிவந்தோர் சீதனம் - என்னென்று
கேட்டல் சிரித்திடத் தக்கதன்றோ ?

சீதள உள்ளம் திகழ் பிறையே - கொஞ்சம்
சிந்தனை செய் ! வழி கண்டுரை செய் !
சீதனத்தாற் சிதைவா கிடும் - ஏழையர்
சிந்தும் கண்ணீர் தனை நீக்கிடச் செய் !

அன்னைக் குலத்தினர் கண்ணீர் - துடைத்திடு
அன்புள்ளம் ஒன்றையே போற்றிடச் செய் !
கண்ணைத் திறந்திடு ! கல்யாணம் - என்பது
அன்புப் பிணைப் பென்றுணர்ந்திடச் செய் !

பிறை - ஜூன் '57.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணிப் பாராய் !

அன்னைக் குலமே ! அன்னைக் குலமே
அடிமை வாழ்வில் அழுந்தியழுத
உன்னை மதித்து உரிமை தந்து
உயர்ந்தவற்றுள் உயர்வையாக்கும்
தன்மைதந்த தகைசால் நபியின்
தோற்றம் எண்ணித் 'துதிபாடும் நீ
எண்ணிப்பாராய் இன்றுன் நிலையை !
ஏந்தற் கியற்றும் கைம்மாறிதுவோ!

இஸ்லாம் நிலைக்கும் தூணுய் நிற்கும்
இளைஞர் படையைப் படைக்கும் சிற்பி
விஸ்வாசம் கொள் வீரத் தாயாம் !
விளையும் பண்புக் கவளே களமாம் !
இஸ்லாம் வளரும் களம் நீயென்றல்
இன்றேன் களைகள் விளைவதங்கே!
விஸ்வாசம் கொள் வீரமைந்தர்
வெற்றுப் பொம்மை யாஞரிங்கேன் !

"அன்னையழகுப் பாதத்தின் கீழ்
அன்பார் மக்கள் சுவர்க்கம் உண்டு"
என்றூர் அண்ணல் ! ஏற்றம் தந்தார் !
இன்றுன் பாதத்தடியில் ஏனோ
புன்மை வளர்க்கும் பூசல் விளைக்கும்
புழுங்கும் நரகப் பதர்கள் விளைந்து
பண்பைக் கெடுக்கப் பாதையமைத்தாய் !
பெருமான் தந்த மதிப்பேன்
குறைத்தாய் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விகற்றுக் கருதும் தொழில் செய்
கன்னிமலராய்க் கணவன் மதிக்கும்
நல்லதுணையாய் நயமார் பணிக்கோர்
நற்பெண்மணியாய் நற்ருய்க்கண்மணியாய்
எல்லையில்லா அன்புக்கனியாய்
இனிய வீடும் எழிலார் நாடும்
செல்வமாயுன் செழும்பண் பேத்தச்
செய்த பெருமான் வழியேன் மறந்தாய்

கற்ற அன்னைக் குலமேயுந்தன்
கல்வியெங்கள் கலாசாரத்தை
உற்றமறையின் வழியை நாதர்
உவந்த நெறியை ஓதுக்கவென்ருற்
சற்றும் உன்ருற் பயனுண்டாமோ!
சமூக வளர்ச்சி யதனுலாமோ!
பெற்றவள்உன் பண்பை விற்றுப்
பிறர் பண்புக்கேன் பலியாய் விட்டாய்!

– தினகரன் - 7 7-67

# மேலாம் பணி!

ஆசிரியர் பணி மேலாம் – அது
பேசரி தாயநற் பேரும்!

சந்தனக் கட்டையைப் போலே - அவர்
சந்ததமும் அழிந்தாலும் மண்மேலே
விந்தை அறிவு மணத்தைத் – தந்து
மேதைச் சமூகம் படைப்பதனாலே
ஆசிரியர் பணி மேலாம்!

சிந்தனை யிற்றெளிவூட்டி - இருட்
சிந்தையின் மாயைகள் யாவையுமோட்டி
நிந்தனை வாழ்வினைப் போக்கி - என்றும்
நேய நலந்தனை யீவதனாலே
ஆசிரியர் பணி மேலாம்!

ஒற்றுமை வித்தினைத் தூவி - இள
உள்ளங்களில் உயர் எண்ணங்கள் மேவிப்
பற்றுடன் நாடு தழைக்கச் - சேவை
யாற்றிட நல்லுணர் வூட்டிடும் தூய
ஆசிரியர் பணி மேலாம்!

உரிமைக்குப் போரிட ஊக்கி – உளத்
தூறும் சுதந்திர தாகத்தை வீக்கிச்
சிறுமைகள் சாய்ந்திடத் தாக்கும் - செழுஞ்
சிங்கத்து வீரர்கள் சேனையை யாக்கும்
ஆசிரியர் பணி மேலாம்!

சமயங்கள் பற்பல வேனும்- அவை
சாரும் உளங்கள் ஒன்றாகப் பிணைந்து
அமையும் உயர் நெறியாக்கி - எங்கள்
அன்னை யகந்தன்னைப் பூரிக்கச் செய்யும்
ஆசிரியர் பணி மேலாம்!

பேராதனை ஆங்கில ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மலர் 1971.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிஞர் சித்திலெவ்வை !

உரிய உரிமை பெற்றேங்கி
உயர முஸ்லிம் சமுதாயம்
அரிய வாழ்வை அர்ப்பணித்த
அறிஞர் சித்தி லெவ்வையவர்
துரித மாக முன்னேறும்
துடிப்பைத் தந்து துணைநின்று
பிரிய மாக நாம் போற்றும்
பேற்றைப் பெற்ற பெருந்தகையர் !

ஆங்கி லத்தைக் கற்ருலும்
அறபில் தேர்ச்சி பெற்ருலும்
பாங்காய்ச் சோதர முஸ்லிம்கள்
பயிலும் அறபுத் தமிழையே
தாங்கித் தம்கொள்கை தம்மைத்
தரும் முஸ்லிம் நேசன் தன்னை
ஓங்கும் பணிக்காய் உலாவிட்டு
உள்ளத் துறையும் உயர்வுற்ருர் !

கல்விக் கண்ணைத் திறந்தாலே
காணும் வாழ்வில் ஒளியென்று
கல்விக் கழகம் பலகண்டு
கற்க நூல்கள் பலதந்து
தொல்லை புயல்போற் சூழ்ந்தாலும்
துணிந்து வென்று, மன்னித்து
எல்லை யில்லாப் பணிசெய்து
இதயந் தன்னில் இடம்பெற்ருர் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு உயர உழைத்திடுவோம்!
நலமார் விவசாயம் புரிவோம்!
தேடும் செல்வம் தனைத் தூய
துறை யெல் லாம் சென் றடைந்
திடுவோம்!

மூடப் பழக்க வழக்கங்கள்
முற்றாய்க் களைவோம்; புதுமைகள்
நாடிப் புரிவோம் எனநம்மை
நடாத்திச் சென்ற நற்றலைவர்!

மக்கள் பணிக்காய்த் தம்வாழ்வை
மகிழ்வோ டர்ப்ப ணிப்பவரே
மக்கள் தலைவராம் தகைமை
மதிப்பாய்ப் பெறுவர்! இதற்கமையத்
தக்க மறையின் கருத்தாய்ந்து
தனித்து வத்தைக் காத்த அவர்
எக்கணத்தும் இஸ்லாத்தின்
இதயத் துடிப்பாய்த் திகழ்ந்திட்டார்!

செழிக்கும் ஈழத் திருநாட்டிற்
சிரம் நிமிர்ந்து முஸ்லிம்கள்
களிக்கும் வாழ்வு கண்டுயரக்
களமமைத்த கண்ணியராம்!
விழிக்கும் தூர நோக்கினராம்!
விரிந்த அறிவார் மேதையராம்!
தெளிக்கும் அன்புத் திருவினராம்!
சித்தி லெப்பைத் திருமகனும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுவகை அழகு!

வறுமைக்கழகு தருமோர் பண்பு
வையத் துண்டு அறிவீரோ?
சிறுமை நீக்கிப் பெருமைசேர்க்கும்
சிதையாக் கற்பு அறிவீரே!

உபகாரத்துக் கழகாம் ஒன்று
உண்டாம் அதனை அறிவீரோ?
உளமார் நன்றி உணர்வாமந்த
உதவிக் கழகு அறிவீரே!

துன்பத்திற்கும் அழகொன்றுண்டு
துணிவாய்க் கூற அறிவீரோ?
போற்றும் அல்லாஹ் அருளை நாடும்
பொறுமை அதுவாம் அறிவீரே!

கற்கும் கல்விக் கழகைக் கூட்டும்
கனிவாம் பண்பொன் றறிவீரோ?
கற்றுத் தேர்ச்சி பெற்றுக் கொள்ளும்
அணியாம் அடக்கம் அறிவீரே!

அச்சத்துக்கும் அழகுண்டதனை
ஆய்ந்து சொல்ல அறிவீரோ?
மெச்சும் இறையை அஞ்சும் பக்தர்
விழியின் அழுகை அறிவீரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபகாரம் செய்துயர்வோர் தன்மைக்
கழகாம் ஒன்று அறிவீரோ ?
உண்டாம் பிரதி பலனைக் கருதா
துதவும் பண்பாம் அறிவீரே !

நாயனை வணங்கும் தொழுகைக்கழகு
நயமாய்க் கூற அறிவீரோ ?
தூய உளத்தில் தோன்றும் அச்சம்
தொழுகைக் கழகாம் அறிவீரே !

கவிதைக்கரு ; ஹஸ்ரத் அபூபக்கர் (றலி)

# தாய்த் தமிழே !

தமிழே தாய்த்தமிழே தாரணியின்
தேன்மொழியே நீ
அமிழ்தாய் நாவினிலே ஆடும்
இளம் கனிமொழியே நீ
தமிழே தாய்த்தமிழே நீ நாமுந்தன்
புகழ் இசைப்போமே !

பாரிலே பழமொழியாய்ப் பரிமளித்தே
பயன்தரும் மொழியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமையை வாழவைத்தும் புதுமைசெய்தும்
பொலிவுறும் மொழியே

சீரிளம் கன்னியெனச் செழிப்படையும்
செந்தமிழ் மொழியே
சிந்தையில் குடியிருந்தே சீரிய வாழ்வளித்திடும்
மொழியே

ஒப்பில்லா இலக்கியத்தால் ஒளிபரவும்
உலக நன்மொழியே
தப்பில்லாத் திருமறைகள் தரும் கருத்தால்
தழைத்த நன்மொழியே

இயலிசை நாடகத்தின் எழில் தவழும்
இனிய நன்மொழியே
பயில் பவர் உளந்தனைப் பாங்காய்க் கவரும்
பாச நன்மொழியே

நலம் தரும் ஞானமெல்லாம் நிறைந்து
நற்புகழ் பெறும் தமிழ் மொழியே
நானிலம் முழுவதையும் நயந்திணைக்கும்
நட்பொளிர் மொழியே

யாதுமூர் யாவரும் கேளிர் என்னும்
பண்பாடுறை மொழியே

பேதமெல்லாம் ஒழித்தே பெருமைதரும்
சமத்துவ மொழியே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரிந்து கொண்டால்!

எங்கள் நாடு இன்ப வீடு
என்றே உணர்ந்திடுவோம் - இதனை
நன்றே உணர்ந்திடுவோம் - இந்த
இன்ப வீட்டில் வாழும் சோதரர்
இனியர் நாம் அறிவோம் - இந்த
எண்ணத்தைப் பெறுவோம்!

இனமும், ஏற்கும் சமயமும், மொழியும்
ஏற்றந் தருவனவாம் – ஏற்போர்க்
கேற்றந் தருவனவாம் - இவற்றின்
பெயரைச் சொல்லிப் - பிளவைப் பெருக்கல்
பேதையர் செயலாம் - உதவாப்
பேதையர் செயலாம்!

கருத்து மோதல் காணும்போது
கனிவாய் ஆய்ந்திடுவோம் – நுணுகிக்
கனிவாய் ஆய்ந்திடுவோம் - நியாயப்
பொருத்த மெங்கு உண்டோ - அங்கு
விட்டுக் கொடுத்திடுவோம் - பேதம்
விரட்டி யோட்டிடுவோம்!

ஒருவரையொருவர் புரிந்து கொண்டால்
ஒன்றாய் வாழ்ந்திடலாம் - உலகே
ஒன்றாய் வாழ்ந்திடலாம் - உள்ளம்
மருவும் அன்பிற் பிணைந்தெல்லோரும்
மாண்பாய் வாழ்ந்திடலாம் – நாளும்
மாண்பாய் வாழ்ந்திடலாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலை மறையுமடி!

அவள் : தேயிலைத் தோட்டத்திலே – உடல்
தேய்ந்து தேய்ந்து துரும்பாகி மெலிந்திட
ஓய்வின்றி நாமுழைத்தோம் – மச்சான்
நோய் கண்டு தானிழைத்தோம் – உடல்
ஊறிச் சுரந்திடும் வேர்வைப் புனல் பாய்ச்சி
ஓங்கும் பயிர் வளர்த்தோம் – வளம்
தாங்கும் உயிர் கொடுத்தோம் - வரும்
சாவிலும் நாமிந்தத் தேயிலைக்கே - உரம்
ஆகப் புதைந்திடுவோம் - பெரும்
தியாகம் புரிந்திடுவோம்! - இவை
யாவும் உணர்ந்தும் விலங்கினமாயெமை
இன்னும் மதித்திடலேன்? இடர்பண்ணித்
துரத்திடலேன்? — இவர்
இம்மியும் நீதியில்லாதவரோ? – நாம்
இந்த நாட்டிற் கில்லாதவரோ? – மச்சான்
எத்தனை நாளிந்த வாழ்க்கையப்பா! – இந்தத்
தேயிலைத் தோட்டத்திலே!

அவன் : தேயிலைத் தோட்டத்திலே – உடல்
வற்றி வரண்டு சுருண்டு விழும் வரை
நாளும் உழைத்திடுவோம் - கண்ணே!
நாமிங்கே வாழ்ந்திடுவோம்! – இந்த
நாடும், உழைப்பும் நமக்குப் பயன் தரும்
காலம் மலருமடி! சூழும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலை மறையுமடி ! – நிதம்
ஒற்றுமையாக உழைப்பவர் - நிச்சயம்
காண்பது வெற்றியடி ! - இதை
உணர்ந் துரம் கொள்வாயடி – இனி
உழைப்பவர் நாட்டினை ஆள்வர் - உரிமை
நசுக்குவோர் ஓடிடுவார் ! – உடல்
ஆவி துறந்தும் உரிமையைக் காப்பர் !
உழைப்பவர் பார்த்திரடி ! – கண்ணே !
ஓடிடும் சோகம் ! நன்றோங்கிடும் இன்பந்தான்
தேயிலைத் தோட்டத்திலே ;

*மலை முரசு - 6 – 1962.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வதா வதங்குவதா ?

வாய்மை காப்பவர் வாழட்டும்
வஞ்சம் வளர்ப்பவர் மாழட்டும்
நீதி காண்பவர் நிலைக்கட்டும்
நிலையிழந்தோர் கவிழட்டும் !

உழைப்போர் தம்மைச் சுரண்டுபவர்
உலுத்தராக உலவட்டும்
உழவும், தொழிலும், செய்யாதோர்
உலகை விட்டே ஒதுங்கட்டும் !

இலஞ்சம் கொள்வோர் பரம்பரையே
இலாபம் காணு தழியட்டும்
பஞ்ச காலத்துப் பொருளைப்
பதுக்கும் பாதகர் ஒழியட்டும் !

'காக்காய் பிடித்து' அலைவோர்கள்
காட்டிக் கொடுக்கும் கயவர்கள்
வாக்கை மாறும் வஞ்சகர்கள்
வளம்காணுமல் வதங்கட்டும் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசி!

பசியெனும் நெருப்பே பரந்த இவ்வுலகைப்
பாழ்நரகாக்குதடா - அந்தப் பாழும் நெருப்பை
அணைக்கும் பணியே பாரின் தேவையடா;
உறவைத் தின்று உயிரை வளர்க்கும்
உணர்ச்சி பெருகுதடா - பெரும்
வறுமையதற்கு வழியாயிருந்து
வஞ்சம் புரியுதடா!

பொருளுள்ளோர்தம் உள்ளந்தனிலே
பூட்டு விழுந்ததடா! — அதனுள்
அருளும் கருணை அடங்கிக்கொண்டு
அழுது மாயுதடா!

செல்வம் சிலரிடம் மலையாய்க் குவிந்து
செருக்கை வளர்க்குதடா - அதனால்
பள்ளம் விழுந்து பலரின் வாழ்வு
பசியில் வதங்குதடா!

பசியில்லாத வயிற்றை இறைவன்
படைத்து வைத்தானா - அன்றேல்
பணமில்லாது சுகமாய் வாழும்
வழியை வைத்தானா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படித்தேன்!

கவிஞர் எம், ஸி. எம். ஸுபைர் அவர்கள் மகா கவி இக்பாலின் சரிதையை இனிய, எளிய தமிழில் பாடியுள்ளார்; இப் பாடல்களைப் படித்துச் சுவைக்கும் வாய்ப்பினைப் பெற்றேன்: இக்பாலின் பிரார்த்தனையுடன் ஆரம்பிக்கும் இக்கவிதைகள் இக்பாலின் ஆர்வமூட்டும் வரலாற்றைக் கூறி முடிவடைகின்றன.

இருபதாம் நூற்றாண்டின் முதல் நாற்பதுகளில் வாழ்ந்த மாமனிதர் இகபால்; அடிமை இந்தியாவில் அவர் ஜனித்தார். ஆங்கிலேயன் இந்தியாவை ஆண்டுகொண்டிருந்தான்; அதனை நொந்தார். அறியாமை இந்தியனை அடிமை கொண்டிருந்தது; அதனை வெறுத்தார். தம் மக்களின் விடுதலைக்கான வழி?

மாமனிதர் இக்பாலின் போராட்டம் இருமுனைப் போராட்டம். ஒரு பக்கம் சக்திமிக்க வெள்ளையன்; மறுபக்கம் வேரூன்றிய அறியாமை. பலமிக்க இவ் எதிரிகளைச் சாடினார்; பாடினார் பல நூறு கவிதை! ஒரு புறம் வீர ஆவேசம்; மறு புறம் சத்திய ஆவேசம்; இதனூடே உள்ளூர இழையோடும் மனித நேயம், சிந்திப்பவனது இதயத்தைப் பிழியும் சிரஞ்சீவிக் கவிதைகள்; காலத்தை வென்ற கவிதைகள்.

கவிஞர் எம். ஸி. எம். ஸுபைர் இக்பாலிடம் கொண்ட ஈடுபாடு புரிகிறது. ஒரு கவிஞனுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ் பூத்த பிற கவிஞன் ஒருவன்பால் ஏற்படும் தொழில் ரீதியிலான ஈடுபாடு அல்ல; உணர்ச்சி மிக்க லட்சியப் பிணைப்பு அது என்பது ஸுபைர் அவர்களின் கவிதைகளுடன் உறவுகொள்ளும் போது தெளிவாகிறது.

நுழை வாயிலாக அமைந்த 'பிரார்த்தனை'க் கவிதைகள் கண்ணில் நீர் துதும்பச் செய்கின்றன. 'பிரார்த்தனை' நலமிகுந்த, நயமிக்க கவிதைகள் முகப்பு வாயிலில் முத்தான இக்கவிதைகள் ஆசிரியரின் பணிவையும், தாழ்மையையும் வெகு எளிதில் புலப்படுத்துகிறது.

இறைவா . . . எனப் பிரார்த்தனையை ஆரம்பித்து அருள்வாய் றஹ்மானே! என முடித்துள்ள அழகு வியந்து பாராட்டத்தக்கது.

எந்தன் பணி யெல்லாம் ஏழை
எளியோர் வாழ்வுக் காகட்டும்!
நொந்து வாடும் யாவர்க்கும்
நோவை நீக்க உதவட்டும்!' எனத்

தன் லட்சியத்தை எடுத்துக் கூறும் கவிஞர் சிறுவர்களுக்காகப் பாடப் புகுந்தது பொருத்தமே!

உலகம் எங்கள் தாயகமாம்;
உழைப்பே எங்கள் உயிர் மூச்சாம்!
பல கல்வியையும் கற்றிடுவோம்
பயின்ற வழியிற் பணிபுரிவோம்

எனக் கவிஞர் ஸுபைர் இக்பாலின் உணர்வுடன் கலந்து விட்டிருக்கின்றார். ஸுபைரின் தனிக் குரல் இக்பாலின் மணிக் குரலாக ஒலிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயம் தேங்கிக் கிடக்கிறது, சரியான வழி யின்றித் தவிக்கின்றது, இக்பால் போர்முரசறைந் ததற்கும் ஸூபைர் உணர்வோடு எழுதியதற்கும் காரணம் இதுவோ ?

இளம் நலமுறையினருக்கு எழுதிய கவிதை கள் இவை, தமிழ்ச் சிறுவர் இலக்கியத்திற்கு இது புதிது, தமிழ்ச் சிறுவர் இலக்கியப் பரப்பை விரி வாக்க அடி எடுத்துக் கொடுத்துள்ளார் ; இக் கவி தை இக்பாலின் வரலாறு – பிறப்பு வளர்ப்பு என ஒரு படிமுறை அமைப்பில் — முழுமையாக உள்ளது. "ஒரே ஒரு ஊரிலே, , . ஒரே யொரு ராஜாவாம் . . . !' எனக் கதை போலக் கவிதை நீளுகிறது,

தம்பி !

மேற்கின் அறிவைக் கற்றுக் கொள் !

மேனி மினுக்கில் மயங்காதே !

ஏற்பாய் கிழக்கின் அன்பையே !

இறையை மறையைப் போற்றிக் கொள்

இடித்துரைக்க வேண்டியதை இடித்துரைக்க வேண்டியது தானே ! திரையில் இருந்து புறப் பட்ட சித்திரம் போலக் கவிஞன் முன் நின்று முழங்குகின்றான். கவிஞரின் உலகளாவிய பார்வை இங்கு புலனாகிறது. ஒவ்வொரு கவிதையும் மன தில் பதியும்படியான செய்திகள் சங்கதிகள் இளம் பருவத்தினர் மட்டுமன்றி வயதுவந்தவர் களும் கூடக் கற்று இன்புறத்தக்க கவிதைகள், நலம் காணும் எண்ணங்கள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்பாலின் படைப்புகள் தமிழில் பெயர்க்கப் படல் வேண்டும். இன்றைய எமது சமூகத்திற்கு இக்பால் ஓர் அத்தியாவசியம். ஆன்மிகம் அருகி வரும் வேளை இது. காலங் காலமாகச் சிந்தனையா ளர்கள் (?) ஆன்மிக வாழ்க்கைக்கும், பௌதிக வாழ்க்கைக்கும் இடையே செயற்கையான வேறு பாட்டைப் புகுத்தினர். இதனால் வாழ்க்கை பற் றிய தவறான அபிப்பிராயம் எம்மிடையே பதிந்து விட்டது. ஆன்மிகம் பௌதிகம் எனப் பிரித்துப் பார்க்க முடியாதவாறு அவை ஒன்றிணைந்ததே வாழ்க்கை. ஒன்றின் வளர்ச்சியில் மற்றதன் வளர்ச் சியும், ஒன்றின் தூய்மையில் மற்றதன் புனிதமும் தங்கியுள்ளது என்பது இஸ்லாம் கூறும் நெறி, இவ் வுண்மையை எதற்கும் விஞ்ஞான ரீதியாகத் தர்க்க ரீதியாக விளக்கம் கேட்கும் நாகரிக உலகுக்கு விளங்க வைத்தவர் மாமனிதர் இக்பால். எனவே இக்பால் எம்மில் ஒருவராக்கப்படல் வேண்டும்! கவிஞர் ஸுபைர் இதனை ஓர் இயக்கமாகவே மேற் கொள்ள வேண்டும். அவரது மொழியில் இதற் கும் அருள்வாய் றஹ்மானே!

அன்புடன்,

**எம். எல். எம். ஸித்தீக்**

25—10—81.
க/மத்திய மகா வித்தியாலயம்,
அக்குறணை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாகவி இக்பால்

சியால்கோட் என்னும் நகர்தனிலே
சேக்நூர் முஹம்மதெனும் பெரியார்
தயாளம் மிக்க பண்பினராய்த்
தனிமாண் போடு வாழ்ந்திருந்தார்.

அந்தப் பெரியார் அன்றோர்நாள்
அழகிய வெண்பு ருவொன்று
அந்தரத்தில் வட்டமிடும்
அழகைப் பார்த்தா னந்தித்தார்.

சிந்தை கவரும் அந்தப்புரு
சீராய்க் கீழ்நோக் கிப்பறந்து
வந்த மர்ந்த தவர்மடியில்
மகிழ்விற் றிளைத்த தவருள்ளம்!

கண்ணை விழித்தார்! காட்சியது
கனவு! அந்தக் கணத்திலிலே
கண்ணைத் திறந்த ஆண்மகவைக்
கையிற் கொடுத்தா ளோர்தாதி!

வண்ண மலராய் வையத்தில்
வந்து தித்த மைந்தனிறை
தண்ண ருள்சேர் சாந்திவழி
தனைக்கப் பாடிப் புகழ்பெறுவான்!

திண்ண மிதுவென் கனவுரைக்கும்
சேதியிது என்றப் பெரியார்
எண்ணிச் சேகு முஹம்மதிக்பால்
என்றே நாமம் இட்டனரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்பால் வளர்ந்தார் ! 'புகழ்' என்னும்
இனிய தன்பேர் நிலையாக்கத்
தக்க வழியிற் கற்ருய்ந்தார் !
தழைக்கு மன்பின் வழிகண்டார் !

வளரும் வயது பதினேழில்
வளமார் கவிதை மழைபெய்தார் !
மலரும் அன்ஞர் கவிதைகள்
மக்கட் குப்புத் துணர்வூட்டும் !

திருக்குர்ஆனல் வாழ்வொளிரும்
திண்மை சேரும் இதயத்தில்
உருப்பெறு முலக சமாதனம்
உறுதி ! உணர்ந்தார் உயரிக்பால் !

மீர் ஹஸனும் குருவினிடம்
மேலாம் இஸ்லாம் கற்றறிஞர்
ஆர்ஞ லிடத்தில் தத்துவமும்
அழகாய்ப் பயின்ருர் கவி இக்பால் !

இருபத் தாரும் பருவத்தில்
எம். ஏ. கற்றுத் தேர்வுற்ருர்
திறமைத் தேர்ச்சிப் பரிசாகத்
தங்கப் பதக்கம் தான்பெற்ருர் !

முப்பத் திரண்டாம் வயதினிலே
மேல்நா டேகித் தத்துவமும்
தப்பில் லாச்சட் டப்படிப்பும்
தரமாய்க் கற்றுப் புகழ்பெற்ருர் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேம்பிரிட்ஜ் பீ.எச்.டி.ப் பட்டம்
ஜேர்மன் கலாநி திப்பட்டம்
தேம்ஸ்நதிக்கரை யெழில் நகராம்
இலண்டன் 'பாரிஸ்டர்' பட்டம்!

என்று கல்விக் களம்பட்டம்
எல்லா மெய்தி மேதையாய்
நன்று பெற்ற தாய்நாட்டை
நாடி வந்தார் நம்மிக்பால்!

அரபி உர்து பஞ்சாபி
ஆங்கி லம்ஜேர்மன் லத்தீன்
பாரசீகம் சமஸ்கிருதம்
பன்மொ ழிப்புலவர் இக்பால்!

நாடு சுதந்திரம் பெற்றிடவும்
நல்லிளை ஞர்உணர் வூற்றிடவும்
பாடு பட்டுப்பயன் பெற்றிடவும்
பாதைய மைத்தார் நம்மிக்பால்!

இளைஞர்க் கறிவு விருந்தாக
இலங்கும் 'ஜாவித் நாமாவை
அழியாப் பாரகாவிய மாய்
ஆக்கி யகிலக் கவியானார்!

'அஸ்ராரே குத்இ' என்னும்
அரிய தத்துவ நூலாக்கி
விஸ்வாசம்! இக்பால் தத்வ
வித்தகர்! என்பதை நிருபித்தார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷிக்வா—வ – ஜவாபே ஷிக்வா
என்னும் முறையீடும் பதிலும்
தக்கோர் புகழ ஆக்கியதில்
தந்தார் முஸ்லிம் கட்குணர்வு !

இஸ்லாத்தின் பண்பா டுணர்த்தும்
இனிய கட்டுரை தத்துவங்கள்
இசைசேர் கல்விக் கொள்கைகள்
இயலும் நூல்கள் பலசெய்தார் !

அறிவின் தீபச் சுடரேற்றும்
அறிஞர் இக்பால் பணிதன்னிற்
பெருமை கண்டு 'ஸர்' பட்டம்
பிரித்தா னியமன் னருமீந்தார் !

''வாழ்க்கை தன்னில் நீகற்று
வளத்தைக் காண நேரிட்டால்
வாழ்க ! மகனே இஸ்லாத்தின்
வளத்துக் கதனைப் பயனுக்கு !''

என்ற தந்தை கட்டளையை
இதயத் தெண்ணிச் செயலாக்கிப்
பொன்று இஸ்லாம் தழைத்தோங்கப்
புதுப்பாதை கண் டாரிக்பால் !

பத்துக் கோடி முஸ்லிம்கள்
பரந்த இந்தியா வுள்ளோம் !
சித்தம் ஒன்றாய்ச் சேர்ந்தேநாம்
சீராய்க் காண்போ மோர்நாடு !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நாடு நல்லிஸ்லாம்
அடிப்படையில் அமையும் எனச்
சொந்த எண்ணம் தனைச் சொன்னார்
சுடரும் பாக்கிஸ்தான் அதுதான் !

இலங்கும் பாக்கிஸ் தான் தந்தை
ஏத்தும் வழக்கறி ஞர்இக்பால்
கலங்கும் வையம் சாந்திதனைக்
காணக் கூறும் வழிகேளீர் ,

அல்லாஹ் ஒருவன் அருந்தலைவன் !
அண்ணல் நபிதான் வழிகாட்டி !
எல்லாக் கலைக்கும் தாயகமாம்
எழிலார் குர்-ஆன் எம்வேதம் !

உழவனுக் குநவாக் கழனி
ஓரங் குலமெங் கிருத்தாலும்
அழலை மூட்டி யெரித்திடுக !
அதிர்ந்து சரிக கோட்டைகள் !

உலகம் எங்கள் தாயகமாம் !
உழைப்பே எங்கள் உயிர்மூச்சாம்
பலகல்வியையும் கற்றிடுவோம்
பயின்ற வழியிற் செயற்படுவோம் !

செயலாற் றுவதன் வழியேதான்
சீர்கா ணும்ஒரு சமுதாயம்
அயர்ந்தால் அடிமையாய் மண்ணில்
அழிய நேரும்இது உண்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருங்கப் பேசு சுறுசுறுப்பாய்ச்
சுயமாய் எண்ணிச் செயலாற்று !
நெருங்கு ! அச்சம் தனைநீக்கு !
நீதி யுண்மை தனைப்போற்று !

மேற்கின் அறிவைக் கற்றுக்கொள்
மேனி மினுக்கில் மயங்காதே !
ஏற்பாய் கிழக்கின் அன்பையே :
இறையை, மறையைப் போற்றிக்கொள்!

உயர் இனம் ஒன்றின் இளஉள்ளம்
உருக்குப் போல உரம்பெற்றால்
அயர்விலை ! அந்த இனம் வாழும்
அதனைக் காக்க வாள்வேண்டாம் !

மேலை நாட்டு நாகரிகம்
மெல்லிசை கண்டு மயங்காதீர் !
வேளை யறிந்துமை அடிமைகொளும்
விந்தை அதனுள் மறைந்துளது !

நீங்கள் கற்கும் கல்விகளும்
நிலைக்கும் பணியும், தாய்நாடும்
ஓங்கும் உலகும் பயன்காணும்
உயர்வுக் கர்ப்பணமாகிடுக !

இளைஞர் இதயந் தனிலிந்த
எழுச்சித் தீயை மூட்டியநம்
கவிஞர் இக்பால் அன்னையரின்
கனிவார் மாண்பைச் சொலக்கேட்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் பயிலும் கல்வியகம்
பேணும் சமயப் பண்பிழந்தால்
தன்னைத் தானே கொலைசெய்யும்
தலமாய் மாறும் எச்சரிக்கை !

சீரிய அன்புத் தாய்மாரே
செல்வம் உங்கள் மக்கள்தான்
நேரிய குர் ஆன் சமுதாயம்
நிலைக்கச் செய்யும் தூண்நீவிர் !

மக்கள் வாழ்வைச் சுவனத்தின்
வாழ்வாய் ஆக்குபவர் நீங்கள்
மக்கள் பணியிற் பண்பூட்டி
வலிமை சேர்ப்பவரும் நீங்கள்

உங்கள் பணியால் உலகுய்யும்
உணர்வீர் சுவர்க்கச் செல்வியராம்
நங்கை பாத்திமா நாயகியை
நாடும் இலட்சியமாய்க் கொள்வீர் !

என்னைப் பெற்ற அன்னையென்
வாழ்விற் பொன்னே லையாவார்
கண்ணேர் கல்வி சன்மார்க்கம்
கருதும் ஒழுக்கம் தந்தவர் !

முஸ்லிம் யாவரும் சோதரராம்
முழுஉலகும் அவர் தாயகமாம் !
முதிரும் அன்பில் உருவாகும்
மேலாம் ஒற்றுமையே பலமாம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறு கிய தேசியம் மொழிவெறிகள்
குறையா நிலையில் பார்மீது
உரிமை சமத்துவம் சகோதரத்துவம்
உயிரில் லாவெறும் சொற்கள்தாம்!

ஒற்றுமை ஒன்றே நிரந்தரமாம்
உருநிறம் தேசியம் குலம்யாவும்
வேற்றுமையாக்கும் விட்டொழிப்பீர்
விமோசனம் அப்போதே மலரும்!

இதனை உணர்வோம் இயங்கிடுவோம்
இதயம் மலரும்! இருள்மறையும்!
உதயம் ஆகும் ஒற்றுமையும்
உலகம் சாந்தி மயமாகும்

என்றேவாழ்க்கைத் தத்துவத்தை
இனிதே ஆய்ந்து ஒருலகம்
நன்றே அமைய வழிசொன்னர்
நானிலத்தின் கவிஇக்பால்

ஆண்டு அறுபத் தைந்தாக
அகிலந் தழைக்கும் பணியாற்றி
மீண்டும் வாரா வுலகடைந்தார்
மேதை மகாகவி யாமிக்பால்

உண்மை மூமீன் அடையாளம்!
உரைப்பேன் மரணம் வருங்காலை
மாண்பார் மலர்போ லவர்வதனம்
மலர்ந்து தோன்றும் அறிவீரே

என்றூ ரிக்பால் இவ்வையம்
ஏத்த வாழ்ந்தார் மறைவுற்றூர்
நன்றூர் மாந்தர் நெஞ்சத்தில்
நந்தா விளக்காய் ஒளிர்கின்றூர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளம் பல நிறைந்து வாழிய லங்கா !

அன்னையெம் மீழ அணங்கவள் செய்த
நன்மையே சேரும் நனி பெருந் தவத்தால்
துன்பம் நீக்கித் தூய்மையே சேர்க்க
அன்புடை மக்கள் அவதரித்தனரே! !
அன்னியன் அன்னையை அடிமை கொண்டானெனும்
துன்பம் உள்ளே துளைத்திடல் கண்டு
இன்னுயிர் நீத்தும் இன்புட னீன்ற
தாயவள் துயரைத் தளையுடன் நீக்கத்
துணிந்தனர் முற்றும் துறந்தனர் சுகமே !
அரைக் கண மாயினும் அன்னையின் மீட்சியே
கருத்தினிற் கொண்டனர் கனிவுடன் உழைத்தனர்
முயற்சியின் பயனாய் முளைத்த நற் சுதந்திரம்
அயற்சியை யகற்றி அனைவரும் ஒன்றென
உயர்ச்சியை நாடி உழுதொழில் போற்றிப்
பெறற்கரும் சுதந்திரம் பெற்ற நற் பயனை
உறுவினை யாவும் உவப்புட னாற்றி
எழிலுறு மிலங்கை எவரும் புகழ்ந்திட
ஒளிபெறச் செயவே உணர்ந்திடல் வேண்டும் !
சுதந்திரம் பெற்ற சுந்தரி யெங்கள்
இதந் தரும் இலங்கா தொழில்பல சிறந்தே
அகிலம் போற்ற அறவழி யோர்ந்து
வளம் பல நிறைந்திட வாழி ! வாழி !!
வீர இலங்கா விடுதலை தந்த
வீரரும் சிறப்பொடு விளங்கிட என்றும்
பார்நிதம் புகழப் பண்புடன்
வாழி ! வாழி ! வழி வழி சிறந்தே !

தினகரன் - 4-2-50

இது கவிஞர் ஸுபைர் எழுதி அச்சில் வந்த முதற் கவிதையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸுபைர் யார்...?

தமிழ் மன்ற நிர்வாகி
எஸ் எம். ஹனிபா

'அலை கடல் ஓடியும் அரும் பொருள் தேடு' என்ற முதுமொழி உண்மையை உணர்ந்த அருபியர்கள், ஆதிகாலம் தொட்டே வர்த்தகத்தில் ஈடுபட்டனர். இலங்கையுடன் இருபது நூற்றுண்டுகளுக்கு மேலாக அருபியரின் வர்த்தகத் தொடர்ப்பு இருந்து வருகிறது என்பதை வரலாறு நிலைநாட்டியுள்ளது. இப்படி, வர்த்தக நோக்கத்துடன் இலங்கை வந்திருந்த; நாலு அருபியர்கள் கண்டியில் குடியேறினர். இவர்களின் சந்ததிகள் பிஸ்பு. மஹயாவ, நித்தவெல, மாவில்மட, அக்குறணை போன்ற இடங்களில் முஸ்லிம் கிராமங்களை அமைத்தனர்.

அக்குறணையிலிருந்து நாலைந்து மைல் தூரத்திலுள்ள கல்ஹின்னையில் வாப்புக்கண்டு என்பவர் முதன் முதலில், சுமார் இரண்டரை நூற்ருண்டுகளுக்கு மூன் குடியேறிச் சுபிட்சமாக வாழ்ந்தார். இவரின் தம்பி இஸ்மாயில் கண்டு அடப்பனுர், கல்ஹின்னையை அடுத்துள்ள ரம்புக்எல எனும் இடத்தில் வாழ்க்கை நடத்தி வந்தார். கண்டிப் பகுதியிலிருந்து முஹம்மது காஸிம் எனும் ஒருவர் கல்ஹின்னை சென்று, வாப்புக் கண்டுவின் மூத்த மகளைக் கலியாணம் செய்தார். இவர்களுக்குப் பிறந்த ஆதம் பிள்ளை என்பவர், வாப்புக்கண்டுவின் தம்பி இஸ்மாயில்கண்டு அடப்பனுரின் மகளான ஹலீமாவைத் திருமணம் செய்து, கல்ஹின்னையில் நிரந்தரமாக வாழ்ந்தார். இவர்களுக்கு எல்லாமாக ஏழு பிள்ளைகள் பிறந்தனர். ஆறு ஆணும் ஒரு பெண்ணும்.



தந்தை. அல்ஹாஜ் ஏ. ஒ. எம். காஸிம் லெப்பை.

ஆதம்பிள்ளை – ஹலீமா தம்பதிகளின் மூன்றாவது மகன் உமர் லெப்பை, மரியம் பீவீ என்பவரைத் திருமணம் செய்து, கல்ஹின்னையில் சீருடனும் சிறப்புடனும் வாழ்ந்தார். இவரின் மூத்த மகனான முஹம்மது காஸிம் லெப்பை என்பவருக்கும், ஸபியா உம்மாவுக்கும் இரண்டாவது மகனாக, 1933ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ம் திகதி முஹம்மது ஸுபைர் பிறந்தார். அல்ஹாஜ் ஏ. ஓ. எம். காஸிம் லெப்பையின் தகப்பனார்தான் கல்ஹின்னையில் முதன் முதலாகக் கடை ஆரம்பித்தவர். அதனால் அவரை அன்று முதல் 'கடே முதலாளி' என்று அழைப்பதுண்டு. அவரின் குடும்பம் இன்றும் 'கடைக் குடும்பம்' என்று அழைக்கப்படுகிறது. இவரின் முன்னையோர், கண்டி மன்னனுக்குத் தேவையான உணவுப் பொருட்களை வழங்கியதால் 'அடப்பனார்' என அழைக்கப்பட்டனர். அதனால் இன்றும் அந்த முன்னையோரின் பிற்சந்ததிகள் 'அடப்பியலாகெதர' எனும் வீட்டுப்பெயர்' கொண்டு அழைக்கப்படுகின்றனர்.

கல்ஹின்னையில் 1934ம் ஆண்டு ஜூன் மாதம் 1ம் திகதி கமாலியா முஸ்லிம் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. ஸுபைரின் சிறிய தந்தையான புரக்டர் அல்ஹாஜ் ஏ. ஓ. எம். ஹுஸைனின் முழு முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலையில்தான், அவர் கல்வி பயிலத் தொடங்கினார். பின்னர் தோன்றிய கல்ஹின்னை அரசினர் கனிஷ்ட பாடசாலையிலும் தமிழ் மொழி மூலம் கல்வி கற்று, சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் 1950ம் ஆண்டு சித்தியெய்தினார். பின்னர் அளுத்கமை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியல் சேர்ந்து 1952—53 ஆகிய ஈராண்டு காலம் பயிற்சி பெற்று, பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியரானார்.

முதல் முதலில், பண்டாரவளை சாஹிறாக் கல்லூரியில், 1954ம் ஆண்டு ஜனவரி மாதம் 13ம் திகதி தனது ஆசிரியப் பணியைத் தொடங்கினார், இதிலிருந்து, கொழும்பு ஹுஸைனியாக் கல்லூரி, மாவதபொலை முஸ்லிம் வித்தியாலயம், கல்ஹின்னை அல்மனார் மகா வித்தியாலயம், அக்குறணை மத்திய கல்லூரி ஆகியவற்றில் கடமையாற்றினார். தற்பொழுது (1981ல்), கல்ஹின்னை பள்ளியகொட்டுவ முஸ்லிம் வித்தியாலயத்தில் பணியாற்றுகிறார்.

கல்ஹின்னை பாடசாலையில் இவர் படித்துக்கொண்டிருந்த காலத்தில், 1946ம் ஆண்டு நவம்பர் மாதம் 4ம் திகதி கல்ஹின்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் சங்கம் தோன்றியது. 1947ம் ஆண்டு ஜனவரி மாதம் 3ம் திகதி பொது நூல் நிலையம் ஒன்றை ஆரம்பித்த மாணவர் சங்கம், நூல் நிலையத்தில் சுவர்ப் பத்திரிகை ஒன்றையும் ஆரம்பித்தது, அதன் ஆசிரியர் குழுவில் இவரும் இருந்தார். மாணவர் சங்கந்தான், எழுத்துத் துறையில் தான் ஈடுபடுவதற்குப் பெருந் துணையாய் இருந்தது என்று ஸுபைர் இன்று நன்றிப் பெருக்குடன் நினைவு கூருகிறார்.

"நேர்மையாகச் சிந்தித்து, தன்னடக்கத்துடன் திட்டமிட்டுச் செயலாற்றும் இளைஞர்களைக் கொண்ட ஓர் இயக்கத்தினால் ஒரு கிராமம் ஒளிபெற்றுத் திகழும் என்பதற்கு, கல்ஹின்னை மாணவர் சங்கம் ஓர் உயரிய எடுத்துக்காட்டு என்று கூறும் கவிஞர் ஸுபைர் இன்று கல்ஹின்னை மாணவர் அத்தகைய இயக்கத்தைத் தளர விட்டது, வளரும் சந்ததியினருக்கே பேரிழப்பாகும் எனக் கருதுகிறார்.


கவிஞர் ஸுபைர்.

பாடசாலையில் படித்துக்கொண்டிருக்கும்பொழுது சிறு கவிதைகள், கட்டுரைகள், பாலர் மனதைக் கவரக் கூடிய கதைகள் முதலியவற்றை இவர் எழுதினார். கல்ஹின்னை எஸ். எம். ஹனிபாவை ஆசிரியராகக் கொண்டு 1948ம் ஆண்டு மார்ச் மாதம் வெளியான 'சமுதாயம்' சஞ்சிகையின் முதற் பிரதியில் முதலாவது ஆக்கம் அச்சானது. 'நன்றிகெட்ட நரி அண்ணா' என்பதே அக்கதை. அதைத் தொடர்ந்து, 'சமுதாயம்' அவரின் பல ஆக்கங்களை வெளியிட்டது. தினகரன் பாலர் பகுதியில் பல கதை, கட்டுரைகளை எழுதினார். வேறு பல சஞ்சிகைகளிலும் அவரின் ஆக்கங்கள் பிரசுரமாகியுள்ளன. கல்ஹின்னை மாணவர் சங்கம் 1951ம் ஆண்டில் வெளியிட்ட ஐந்தாம் வருட நிறைவு மலர் 'யூனியன்' அவரின் "இயற்கை வனப்பொளிரும் கல்ஹின்னை" என்ற கட்டுரையை வெளியிட்டுள்ளது.

கவிஞர் ஸுபைர் எழுதிய முதல் நூல் 'மலர்ந்த வாழ்வு' இது ஒரு சிறு காவியம். ஒட்டமான கவிதையில் எழுதப்பட்டுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலை கல்வுறின்னைத், தமிழ் மன்றம் 1956ம் ஆண்டில் வெளியிட்டது. பாடசாலைகளில் உப பாடப் புத்தகமாகப் பாவிப்பதற்கு இந்நூல் கல்வித் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 1967ம் ஆண்டில் வெளியான 'மலரும் மனம்' இவர் எழுதிய பாலர் பாமாலை. மட்டக்களப்புக் கிராமியக் கவிதை விளக்கக் கட்டுரைகளைக் கொண்ட 'கண்ணான மச்சி' 1969ம் ஆண்டில் சென்னையிலுள்ள திரீயெம் பப்ளிசர்ஸ் ஆல் வெளியிடப்பட்டது. 1978ம் ஆண்டில் வெளியான 'மகாகவி இக்பால்' கவிஞர் ஸர் முஹம்மது இக்பாலின் வாழ்க்கை பற்றியும் அவர் காட்டிய வாழ்க்கைத் தத்துவம் பற்றியும் சிறுவருக்குக் கவிதையில் எடுத்துக் கூறுகிறது,

சீறாப்புராணம்—பதுறுப் படலம், இவரும், பதுளை பி. எம். எம். அப்துல் காதர் ஆசிரியரும் இணைந்து எழுதிய உரையுடன் வெளியிடப்பட்டுப் பாடநூலாக இருந்தது. புதுகுஷ்ஷாம் முஹம்மதியாக் காண்ட வசனம் இவரால் திருத்திய மறுபதிப்பாக வெளியிடப்பட்டது. இதுவும் பாட நூலாகப் பாடசாலைகளில் ஜி. ஸீ. ஈ. வகுப்புகளில் பாவிக்கப்பட்டது.

மாணவர்க்காக மணிக்குரல் என்ற மாத இதழை 1960ம் ஆண்டிலிருந்து. 1964ம் ஆண்டு வரை சிறப்பாக வெளியிட்டார்,

1961ம் ஆண்டு பெப்ரவரி மாதம் மணிக்குரல் பதிப்பகத்தை இவர் நிறுவினார்; பதுளை ஆசிரிய நண்பர் ஜனாப் பி. எம். எம். அப்துல் காதர் இவருக்குப் பதிப்பக அலுவல்களில் துணைபுரிந்து வந்துள்ளார். முதலில், சீறாப்புராணம்—ஹிஜ்றத்துக்காண்டம்—பதுறுப்படல உரையும் அடுத்து, புதுகுஷ்ஷாம் முஹம்மதியாக் காண்டம் திருத்திய மறுபதிப்பும் வெளியிடப்பட்டன. மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் தற்பொழுது இலக்கியப் பேராசிரியராயிருக்கின்ற கலாநிதி அல்ஹாஜ் எம். எம். உவைஸ் அவர்களின் இரண்டாவது நூலான 'இஸ்லாமியத் தென்றல்' இப்பதிப்பகம் வெளியிட்ட மூன்றாவது நூலாகும். பின்னர் காத்தான்குடியைச் சேர்ந்த கவிஞர் அப்துல் காதர் லெப்பை அவர்களின் ஐந்து நூல்கள் வெளியிடப்பட்டன. அவையாவன: இக்பால் இதயம், உமர் கய்யாமின் றுபய்யாத் (மொழிபெயர்ப்பு) இந்நூலுக்கு 19 4ம் ஆண்டில் இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு வழங்கப்பட்டது. செய்னம்பு நாச்சியார் மான்மியம், மெய்நெறி (சிறுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு நூல்), இறசூல் சதகம். ஒன்பதாவது வெளியீடாகக் கவிஞர் எம். ஸி. எம். ஸுபைர் எழுதிய பாலர் பாமாலையான 'மலரும் மனம்' வெளிவந்தது, அடுத்து—இமாம் ஹுஸைன் (றலி) அவர் களின் வரலாற்றைக் கவிதையில்—கவிஞர் கல்ஹின்னை எம். எச். எம். ஹலீம்தீன் தியாகச் சுடர்' எனும் பெயரில் எழுதியது பிரசுரிக் கப்பட்டது. கடைசியாகக் கவிஞர் ஸுபைர் எழுதிய 'மகாகவி இக்பால்' 1978ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் வெளியிடப்பட்டது.

கவிஞர் ஸுபைர் எழுதிய கட்டுரை, கவிதைகளைச் சுதந்திரன், தினகரன், வீரகேசரி, தினபதி ஆகிய இலங்கைப் பத்திரிகைகளும் பருவ வெளியீடுகளும் பிரசுரித்துள்ளன. தமிழகத்தில் வெளிவரும் மணிவிளக்கு, பிறை, முஸ்லிம் முரசு, முல்லை, மலாயாவில் 'நறு மணம்' ஆகியவைவும் இவரின் கட்டுரைகளை வெளியிட்டிருக்கின் றன. இவருடைய ஆக்கங்கள் பற்றிய ஒரு விரிவான கட்டுரையை மலேசிய தினசரி 'தமிழ் முரசு' 1959ம் ஆண்டில் வெளியிட்டது.

1956ம் ஆண்டு முதல் இலங்கை வானொலி முஸ்லிம் நிகழ்ச்சி யில், பங்குபற்றும் இவர். முதன் முதலில் 'இலங்கை இஸ்லாமிய கவிஞர்கள்' என்ற பேச்சை நிகழ்த்தினர். (இந்தப் பேச்சு உமா வாசகம் என்ற 6ம் வகுப்புக்கான பாட நூலில், சேர்க்கப்பட்டுள் ளது), பேச்சுகள், விவரணச் சித்திரங்கள், கவியரங்குகள். தொடர் நிகழ்ச்சிகள், எனப் பல்வகை நிகழ்ச்சிகளிலும் பங்கு கொண்டுள்ள இவர், மருத மலர் எனும் நிகழ்ச்சியை ஆரம்பித்து இரண்டு வருடகாலம் நடாத்தினர். இலக்கிய மஞ்சரி எனும் நிகழ்ச்சியையும் இவரே ஆரம்பித்து, ஒன்றரை வருட காலம் நடாத்தியுள்ளார். தமிழ்ச் சேவையில், சிறுவர் கவிதா நாடகங் கள் 'வளரும் பயிர்' நிகழ்ச்சிக்காக எழுதினர். கல்வி ஒலிபரப்பில் இவரின் சிறுவர் பாடல்கள் ஒலிபரப்பாகியுள்ளன. இலங்கை வானொலி முஸ்லிம் நிகழ்ச்சியில் 1957ம் ஆண்டில் 'அண்ணல் நபி பிறந்தார்' என்ற தலைப்பில் கவிதா நிகழ்ச்சியை இவரே முதலில் ஆரம்பித்து வைத்தார்.

1974ம் வருடம் சென்னையில் நடைபெற்ற அனைத்துலக இஸ் லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மகா நாட்டுக் கவியரங்கிலும் இவர் பங்குபற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1977ம் ஆண்டு மே மாதம், சென்னை தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் 'சிறுவர் கதைப் பாடல்கள்' என்ற நூலை வெளியிட்டுள்ளது. குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா இதனைத் தொகுத்துள்ளார், 'சிறுவர்களுக்குக் கவிதை எழுதுவதில் வல்லவராய் புகழ்பெற்ற அறுபது கவிஞர்களின் சிறந்த அறுபது கதைப்பாடல்கள் இதில் உள்ளன. என்று பதிப்புரை கூறுகிறது. அந்த அறுபது கவிஞர்களில், இலங்கையர் இருவரேதான். அதில் ஒருவர் கவிஞர் ஸுபைர். அறுபது பேரிலும் முஸ்லிம் ஒரே ஒருவர்தான்—அவர் தான் எம். ஸி எம். ஸுபைர் ''கவிஞர் ஸுபைர் அவர்கள் தமிழறிந்தோர் அனைவரதும் பாராட்டிற்குரிய வராகிறார்' என்று அழ. வள்ளியப்பாவே குறிப்பிட்டுள்ளார், இவரைப் பற்றி!

பதினெட்டு வருட காலமாக 1942லிருந்து, 1960ம் ஆண்டு வரை—கவிதை எழுதுவதையே மறந்து முகிலுள் மறைந்த முழுமதிபோலிருந்த கவிஞர் திலகம் அப்துல் காதர் லெப்பை அவர்களின் ஆற்றலை உணர்ந்த கவிஞர் ஸுபைர், அவரை மீண்டும் கவிதை எழுதத்தூண்டி, அவரின் ஐந்து நூல்களையும் ஒன்றன்பின் ஒன்றாக வெளியிட்டது சமூகத்தின் நலன் கருதிச் செய்த, சிறப்புப் பணியாகும்.

எழுத்து வேலையுடன் குடத்துள் விளக்காய் இருந்து விடாமல், அவர் பொதுப்பணியிலும் ஈடுபட்டுவந்துள்ளார். கல்ஹின்னை மாணவர் சங்கத்தின் உப தலைவராக 1951ம் ஆண்டில் பணிபுரிந்த அவர், கண்டியில் செயல்பட்ட இலங்கை இஸ்லாமிய எழுத்தாளர் இயக்கத் தலைவராகவும், கல்ஹின்னை எழுத்தாளர் சங்கத் தலைவராகவும் இருந்துள்ளார், கல்ஹின்னை முஸ்லிம் வாலிபர் சங்கத்தின் செயலாளராகவும் சிலகாலம் செயல்பட்டார். அகில இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராகவும், உப தலைவராகவும் இருந்துள்ள கவிஞர் ஸுபைர், இச்சங்கத்தின் ஊவா மாகாண, மத்திய மாகாணக் கிளைகளிலும் உபதலைவர் பதவி வகித்துள்ளார்,

இலங்கை இஸ்லாமிய எழுத்தாளர் இயக்கத்தின் ஆரம்பகர்த்தாக்களுள் ஒருவரான இவர், 'மறுமலர்ச்சித் தந்தை' அறிஞர் முஹம்மது காஸிம் சித்திலெப்பை அவர்களின் ஞாபகார்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக நினைவு முத்திரை வெளியிடுதல் வேண்டுமென இயக்கம் மேற்கொண்ட பெருமுயற்சியில், பெரும் பங்கு கொண்டார். இவரின் இந்த அரும்பணி சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். 1976ம் ஆண்டில் அரசாங்கம் சித்திலெப்பை நினைவு முத்திரையை வெளியிட்டது.

1964ம் ஆண்டு மார்ச் மாதம் 1ம் திகதி மாத்தளையில் மத பக்தியுள்ள குடும்பத்தினைச் சேர்ந்த முஸ்லிம் விவாகப் பதிவாளர் ஏ. சி. எம். மூஹ்ஸின் அவர்களின் சிரேஷ்ட புதல்வியான ஸித்தி ஸரீனாவை மணமுடித்த கவிஞர் ஸுபைருக்கு, ஆண்மக்கள் மூவர் இருக்கின்றனர் மூத்தவரான முஹம்மது ஸக்கிக்குப் பதினாறு வயதாகிறது. யாழ்ப்பாணத்தில், மத்திய கல்லூரியில் கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருக்கிறார். மற்ற இருவரும் எட்டு வயதான முஹம்மது ஸுஹ்பிகார், ஐந்து வயதான முஹம்மது ஸமீக் ஆகியோராவர்.

ஆசிரியராவுகம், கவிஞராகவும், எழுத்தாளர், வானொலிப் பேச்சாளர், நூல் வெளியீட்டாளர், சஞ்சிகை ஆசிரியர், பொதுப் பணியாளர் எனப் பல்வேறு துறைகளில் நலம்பட உழைத்து வருகின்ற முஹம்மது காஸிம் லெப்பை முஹம்மது ஸுபைர் இஸ்லாமிய வளர்ச்சியிலும், சமூகத்தின் உரிமை, பெருமைகளைக்காக்கும் முயற்சியிலும் அயராத ஆர்வமுள்ளவர். தமிழகத்திலும், இலங்கையிலும் இலக்கியப் பேரறிஞர் பலருடன் நெருங்கிய தொடர்புள்ள கவிஞர் ஸுபைர், கல்ஹின்னைக்குப் பெருமை தேடித் தரும் சிலருள், குறிப்பிடத்தக்க ஒருவராக விளங்குகிறார். இவரின் அரும் பணிகளை அங்கீகரித்து, நன்றியறிதலுள்ள இலக்கிய ரசிகர்களும் ஏனையோரும் கொழும்பு ஸாஹிராக் கல்லூரி மண்டபத்தில் 1981ம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம் திகதி அகில இலங்கை ரீதியிலான கவிஞர் ஸுபைர் பாராட்டு விழாவை நடாத்தினர். இலங்கைப் பாராளுமன்றத்தின் சபாநாயகர், மாண்புமிகு அல்ஹாஜ் எம். ஏ. பாக்கீர் மாக்கார் தலைமை வகித்தார். நாட்டின் எல்லாப் பகுதிகளையும் சேர்ந்த அறிஞர்கள், மற்றும் பலர் பாராட்டு விழாவில் கலந்து சிறப்பித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்ஹின்னைத்

# தமிழ் மன்றம்

## வெளியீடுகள்

MUSLIM CONTRIBUTION TO TAMIL LITERATURE (1953)
*by* M. M. UWISE, M.A.

**இலக்கியத் தென்றல் (1953)**
கலாநிதி சு. வித்தியானந்தன்

**தமிழர் சால்பு (1953)** கலாநிதி சு. வித்தியானந்தன்

**மலர்ந்த வாழ்வு (1956)** எம். ஸி. எம். ஸுபைர்

**உலகம் புகழ் உத்தமத் தூதர் (1976)**
எஸ். எம். ஹனிபா

**உத்தும் நபித்து மாகே (1980) சிங்களம்** 4.00
எஸ். எம். ஹனிபா

**உத்தமர் உவைஸ் (1981)** எஸ். எம். ஹனிபா 10.00

THE GREAT SON (1981)
*by* S. M. HANIFFA B.A. (Cey.) 5.00

**காலத்தின் குரல்கள்** எம். ஸி. எம். ஸுபைர் 6.00

**என் சரிதை (அச்சில்)**
கவிஞர் அப்துல் காதர் லெப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர் ஸுபைர் நூல்கள் பற்றி...!

- "படிப்போரின் உள்ளத்தில்... பிரமையை ஏற்படுத்தும் விளக்கங்கள் உண்மையிலேயே ஆசிரியரின் அழகான ரசனையிலிருந்தும், வளமான எழுத்தாற்றலிலிருந்தும் பிறந்தவைதான் என்பதற்கு இந்நூலின் பல பகுதிகள் சான்று கூறும்."

  மௌலவி எம், அப்துல் வஹ்ஹாப், எம். ஏ. பீ. ஹெச்,

  "கண்ணுள மச்சிக்கு வழங்கிய சிறப்புரையில்

- "கண்ணுள மச்சி" ஒரு கனிவான புத்தகம். கிராமியக் காதல் காட்சிகள் சிலவற்றை மென்மை குன்றாமல் தொடுத்தமைத்த நறு மலைமாலை இது."

  தில்லிப் பல்கலைக் கழகப் பேராசிரியர்

  உயர் திரு சாலை இளந்திரையன், எம், ஏ, எம். லிட்.

- "செய்யுள், இக் காலத்து எழும் அகவற் பாக்களைப் போலல்லாது, ஆஞ்செருமுக்காகப் போகின்றது. இன்னும் இத்துறையில் முனைந்து நின்றால் வெற்றிபெறும் தன்மை இவர்க்கு உண்டு என்பதை நூலை வாசிப்போர் அனைவரும் உணர்வர்."

  இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராயிருந்து

  காலஞ் சென்ற **கலாநிதி க. கணபதிப் பிள்ளை**

  "மலர்ந்த வாழ்வு"க்கு அளித்த அணிந்துரையில் கூறிய

  தீர்க்கதரிசனம்

- "குழந்தைக்கேற்ற எழுபத்தைந்து பாடல்களைக் குழந்தையுள்ளத்துடன் இயற்றித் தந்துள்ள கவிஞர் ஸுபைர் அவர்கள் தமிழறிந்தோர் அனைவரதும் பாராட்டிற்குரியவராகிறார்."

  தமிழகத்தின் தலைசிறந்த குழந்தைக் கவிஞர்

  **அழ. வள்ளியப்பா அவர்கள்**

  'மலரும் மனம்' முன்னுரையில்

- "எனது நண்பர் எம். ஸி. எம், ஸுபைர்
  இயற்றிய இந்த இனிய பாக்களில்
  இயற்கை யுண்டு. செயற்கை யுண்டு.
  நயக்கும் கதைகள், நாட்டுப் பற்று,
  தேசம், சமயம் தெய்வ பக்தி
  யாவும் முண்டு..."

  **கவிஞர் திலகம் அப்துல் காதர் லெப்பை**

  'மலரும் மனம்' அணிந்துரையில்

*Printed at the Ariya Printers Kandy*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org